**செய்தி வெளியீடு எண்: 373** **நாள்: 08.06.2018**

## செய்தி வெளியீடு

வட்டி சுமையின் காரணமாக, விற்பனைப் பத்திரம் பெறாமல் இருந்த, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு, மாதாந்திர தவணை செலுத்த தவறியதற்கான அபராத வட்டி மற்றும் முதலாக்கத்தின் மீதான வட்டியினை முழுவதுமாகவும், நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தின் மீதான வட்டியினை வருடத்திற்கு ஐந்து மாதம் மட்டும் கணக்கிட்டு தள்ளுபடி செய்து, அரசு கடந்த 15.06.2017 அன்று ஆணை வழங்கியது. அரசின் ஆணையினைத் தொடர்ந்து, இச்சலுகையினை கடந்த 27.08.2017 அன்று முதல், ஒரு வருட காலத்திற்கு நடைமுறைப்படுத்த, நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அரசின் இச்சலுகையின் மூலம், பல்வேறு திட்டங்களில் ஒதுக்கீடுதாரர்கள் வட்டி தள்ளுபடி நீங்கலாக, முழுத் தொகையையும் செலுத்தி, விற்பனைப் பத்திரம் பெற்று பயனடைந்து வருகின்றனர். இச்சலுகை, எதிர்வரும் 26.08.2018 அன்றுடன் முடிவடைய உள்ளதால், வட்டி சுமையினால் விற்பனைப் பத்திரம் பெற்றிடாத ஒதுக்கீடுதாரர்கள், உடனடியாக சம்மந்தப்பட்ட கோட்டம்/பிரிவு அலுவலகங்களை அணுகி, வட்டி தள்ளுபடி நீங்கலாக, நிலுவைத் தொகையினை உடன் செலுத்தி, விற்பனைப் பத்திரம் பெற, இப்பொன்னான வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**